15 JUN 2013
PUBLIC LIBRARY JAFFNA

The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam,
Chunnakam,
Sri Lanka

# உதய தாரகை
The Morning Star
A Christian Publication Established 1841
Vol. 174 - Jaffna - April, May 2013 . No.1

Righteousness Exalteth A Nation.
But Sin is a Reproach to any people.

Subscription Rs.20/=
(Postage Include)
Please send your News & Articles To
The Editor
The Morning Star
"Asia House"
Maruthanarmadam,
Chunnakam,
Sri Lanka.
Email:
thecacmmorningstar@gmail.com

## கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் 4வது முதல்வரும்
# பதவியமர்த்தும் வழிபாடும்



மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் 4வது முதல்வராக அருட்திரு. A.S.தேவ குணானந்தன் அவர்கள் பதவிய மர்த்தப்படும் வழிபாடு 14-05-2013 அன்று மாலை 4:30 மணிக்கு உடுவில் நல்லாயன்-CACM ஆலயத்தில் CACM பேரவைத் தலைவர் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா தலைமையில் கல்லூரியின் சபாசங்க உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், யாழ், வன்னி, மட்டக்களப்பு பிராந்தியங்களின் பிராந்தியக் குருமுதல்வர்கள் சகிதம் பவனி வரப்பட்டு வழிபாடு ஆரம்பமாகியது.

ஆரம்ப ஒளியேற்றல் நிகழ்வில் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா - CACM தலைவர், அருட்தந்தை. கலாநிதி.மைக்கல் சவுந்தரநாயகம் - முதல்வர், புனித சவேரியார் குருமடம், கொழும்புத்துறை, அதிவண. கலாநிதி. S.ஜெபநேசன் - முன்னாள் J.D.C.S.I பேராயர், அருட்திரு.அ. ஜெயக்குமாரன் - முன்னாள் CACM தலைவர், கலாநிதி. தர்ஷன் அம்பலவாணர் - CACM Director for Theology, அருட்திரு.ஜே. தேவருட்செல்வம் - விரிவுரையாளர் C.T.S, அருட்திரு. B.தேவதாஸ் - செயலாளர், CACM, அருட்திரு. P.R. நவேந்திரனுகூலன் - Seminary Council, திரு. K.பிரதாபன் - EX.CO Member, CACM Vanni Region, திரு. மகேந்திரகுமார் - EX.CO Member, CACM Jaffna Region, அருட்திரு.த.டானியல் ரஞ்சித் - Pastors' Union, CACM Jaffna Region, அருட்திரு. S.ஜோன் லிங்கேஸ்வரன் - Pastors' Union, CACM Vanni Region, திருமதி. S.S.தேவகுணானந்தன் - முதல்வரின் குடும்பம் சார்பாக, திரு. S.செல்வநாயகம் - உடுவில் திருச்சபை பொருளாளர், சகோ. P.சந்திரசேகரன் - C.T.S. மாணவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வணக்க அழைப்பை சபைக்குரு அருட்திரு.இ. ராஜ்குமார் நடாத்த வரவேற்புரையை கல்லூரி மாணவர் நலன்துறைக் காப்பாளர் அருட்திரு.ஜே.அன்ரனி சுதாகர் நடாத்தினார். இறைவேண்டலையும் நன்றியையும் முறையே யாழ். பிராந்திய குருமுதல்வர் அருட்திரு.வ. இராஜ்குமார், வன்னிப் பிராந்திய குருமுதல்வர் அருட்திரு. D.S. குகனேஸ்வரனும் கிழக்குப் பிராந்திய குருமுதல்வர் அருட்திரு. S.I.ஆனந்தராஜா ஆகியோர் வழிநடத்தினர்.

திருமறை வாசகங்களை கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் சகோ.பி.விஜயதாசன், அருட்சகோ. டேவிட் நிருக்ஷன், அருட்திரு. D.S. மதியாபரணம் (கல்லூரி ஆளுநர்சபை

(8ம் பக்கம் தொடரும்)

# ஞான ஒடுக்கமும் ஒன்றுகூடலும்

"நற்செய்தி நாமாகி நற்செய்தி கூறிடுவோம்" எனும் தொனிப் பொருளில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின், குருத்துவ பணியாளர்களுக்கான ஞான ஒடுக்கமும் ஒன்றுகூடல் நிகழ்வும் ஏப்ரல் மாதம் 18ம் 19ம் திகதிகளில் வத்தளை கொரியன் திருச்சபை நிலையத்தில் பேரவைத்தலைவர் அருட்திரு. ஈனோக் பு .புனிதராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முதலாம் நாள் நிகழ்வாக திருச்சபை ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் "கிறிஸ்துவில் வெளிப்பட்ட கடவுளும் நற்செய்தியும்" எனும் தொனிப் பொருளில் அருட்திரு. K.J. அருள்ராஜா (NCC - கொழும்பு) வரலாற்று ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் தெளிவு படுத்தினார்.

"கண்ணீரின் கதைகளும் வாழ்வளிக்கும் நற்செய்தியும்" எனும் தொனிப்பொருளில் அருட்பணி. ஓபெத் தேவநேசன் (லங்கா வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்) திருமறையில் பலருடைய கண்ணீரையும் அவர்களின் கதைகளையும் கூறி குருமார் தங்களின் காயங்களினால் கண்ணீர் வடிக்காமல் மக்களின் காயங்களுக்காக, வாழ்வுக்காக கண்ணீர் வடிக்க ஆயத்தமாக வேண்டுமெனக் கூறி நெகேமியாவை எடுத்துக்காட்டினார்.

"நற்செய்தியின் மகுடம் இயேசுவே" எனும் தொனிப்பொருளில் அருட்பணி. கில்கால் ஜேம்ஸ் (வாலிப கிறிஸ்தவ நற்செய்திப்பணி நிலையத் தலைவர் - இந்தியா) பலவிதமான முறைகளில் நற்செய்தி அறிவிப்பை செய்யலாம் எனத் தெளிவுப் படுத்தினார்.

2ம் நாள் நிகழ்வாக அருட்திரு.ஜோய் எஸ்.துரைரட்ணம் அவர்களின் வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. வழிபாட்டைத் தொடர்ந்து மெதடிஸ்த திருச்சபை பேரவைத் தலைவர் அருட்கலாநிதி. A.W.ஜெபநேசன் அவர்கள் "குருத்துவப் பணியாளர்களுக்கு நற்செய்தியின் அவசியம்" எனும் தொனிப்பொருளில் யுத்த காலத்திலும் நற்செய்திப் பணியின் மூலம் 10,000க்கும் மேற்பட்ட விசுவாசிகள் இயேசுவை ஏற்றுக்

(8ம் பக்கம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரகை ஒளி வீச்சு

## பகிர்தல் இன்றி நற்செய்தி இல்லை!

அன்பின் உறவுகளே!

கிறிஸ்தவ சமயத்தின் பெரும் உண்மை, பகிர்தல் ஆகும். கிறிஸ்தவம் இன்று நீடித்து நிலைத்து நிற்பதற்கு காரணம் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் உயிர்ப்பின் செய்தியை தனியொரு பெண்ணாக நின்று பயங்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, நான் சொல்லும் செய்தியை சீடர்கள் கூட்டம் நம்பினாலும் சரி நம்ப மறுத்தாலும் சரி என்ற துணிவோடு பகிர்ந்துகொண்ட மகதலேனா மரியாள் என்பதிலும் உண்மையிருக்கிறது. தனிப் பெண் பகிர்ந்த செய்தி எல்லாரையும் ஒன்று கூட்டியது. இது தான் நற்செய்திக்கு வடிவம் கொடுத்து சீடர்களை பல இடங்களுக்கு அனுப்பியது மட்டுமல்லாது நற்செய்திக்காக மடியவும் வைத்தது.

இயேசு சமாரியப் பெண்ணோடு உரையாடிய செய்தி அப் பெண்ணினால் அவளது கிராமத்துக்குப் பகிரப்படுகின்றது. பலர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள்.

நற்செய்தி பகிரப்படுகின்றபோது இரையரசின் விழுமியங்களும் பகிரப்படும். எல்லா நற்செய்தி நூல்களிலும் சொல்லப்படும் 5 அப்பமும் 2 மீன்களும் கதையில் நடைபெற்ற அற்புதம் எல்லாரும் தங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்டார்கள். 12 கூடைகள் மிகுதியாய் இருந்தது. இது தான் நற்செய்தி. பகிர்வு இருந்தால் மிகுதி இருக்கும்.

பெந்தகொஸ்தே பெரு விழாவின் பின் எல்லாரும் தங்களிடம் உள்ளதை பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். இங்கேயும் பகிர்தல் ஏற்பட்டது. பகிர்வு இன்றி நற்செய்தி இல்லை என்பது புலனாகிறது.

இன்று பகிர்தல் 'நடைபெறுகின்றதா? பறித்தல் நடைபெறுகின்றதா? பகிர்தல் இருந்திருந்தால் நற்செய்திப்பணி வளர்ந்திருக்கும். நற்செய்திப் பகிரப்படவில்லை. மகதலெனா மரியாளுக்கு, சமாரியப் பெண்ணுக்கு, 5 அப்பம் 2 மீன்கள் வைத்திருந்த சிறுவனுக்கு இருந்த துணிவு, நம்பிக்கை எமக்கு இல்லை.

சமூகப்பணியிலும், நற்செய்திப்பணி உண்டு. ஆனால் சமூகப்பணியில் பகிர்வு இல்லாமையால் இன்று சமூகத்தை கூறுபோடும் பணியாக மாறி வருகின்றது. இதற்கெல்லாம் காரணம் முதலில் எம்மிடம் தெளிவின்மை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு இப்பணிகளைக் குறித்த விழிப்புணர்வை எம் சபைகளுக்கு ஏற்படுத்த தவறிவிட்டோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். திருச்சபை சமூகமும் இறைபணியாளர்களும் காலத்தின் தேவையாகிய நற்செய்திப்பணியை செய்ய வேண்டும். இயேசு உயிர்த்தெழுந்தார், இன்றும் வாழ்கின்றார், எம்மை வாழ வைக்கின்றார் என்ற செய்தியைச் சொல்வதற்குப் பணம் தேவையில்லை.

ஏசாயா தீர்க்கன் 61ம் அதிகாரத்தில் கூறிய சமூக விழிப்பை ஆண்டவர் இயேசு தன் நாசரேத்தூர் பிரகடனமாக லூக்கா:-4:18-19ல் தெளிவுபடுத்தினார். இதில் ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பார்வையற்றோருக்கு பார்வை, ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை. இது தான் இன்று சமூகத்துக்குத் தேவையான நற்செய்தி. அடிமைத்தனத்தில் இருக்கும் மக்கள், தாங்கள் அடிமைத்தனத்தில் இருக்கின்றார்கள், அதிலிருந்து விடுதலை பெற வேண்டும் என விழிப்புணர்வை ஏற்படுத்தினால் போதும். ஆவர்கள் அச்செய்தியை பகிரும்போது அது தான் நற்செய்தி. இதைத்தான் ஆண்டவர் இயேசு கலிலேயாக் கடற்கரையோரமாய் நடந்து திரிந்து செய்து வந்தார். சமூக விழிப்புணர்வு இரையரசின் விழுமியங்களை உருவாக்கியது. இப் பணியைச் செய்ய நானும் நீங்களும் ஆயத்தமா? சிந்திப்போம்.

D.S.M

# புதிய முதல்வர்
## அருட்திரு. A.S. தேவகுணானந்தன்



அருட்திரு. A.S.தேவகுணானந்தன் வரணி திருச்சபையைச்சேர்ந்த திரு. திருமதி. அருளானந்தம் மாக்கிரட் ஆகியோரின் மகன் ஆவார். இவரின் ஆரம்பக் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றுத் தேறியவர்.

1989ம் ஆண்டு மருதனார்மடம் இறையியல் கல்லூாயில் இறையியல் மாணவனாக இணைந்து கொண்ட இவர் 1993ம் ஆண்டு பயிற்சியை முடித்து முதல் முறையாக சில மாதங்கள் கிளி/அக்கரயான்குளம், கோணாவில் திருச்சபைகளிலும் பின்னர் 1993 - 1995 வரை கிழக்கு மாகாணத்திலும், 1995 - 1999 வரை அளவெட்டி திருச்சபையிலும். 1999 - 2003 வரை உடுவில் திருச்சபையிலும் 2003 2010 வரை நவாலி திருச்சபையிலும் பணியாற்றினார். இதன் பின் கல்லூாயில் பதில் முதல்வராக பதவியேற்ற இவர் 2013 மே மாதத்திலிருந்து முதல்வராக தன் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். கல்லூரிப் பணிகளோடு சத்தியபுரம் திருச்சபையின் சேகரக் குருவாகவும் பணியாற்றுகின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத் துறையில் B.A சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர் முது தத்துவமானிக்கான தன் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்.

20 வருடங்களுக்கு முன் மாணவனாக இணைந்து கொண்ட இவர் இக்கல்லூரிக்கு பழைய மாணவர்கள் வரிசையில் முதலாவது முதல்வரும் இறையியல் கல்லூரி வரலாற்றில் 4வது முதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(D.S.M)

# குருமார் இடமாற்றம்

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் பணியாற்றும் குருமார் சிலருக்கு ஏப்ரல் 1ம் திகதி அமுலுக்கு வரும் வகையில் மாற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

- அருட்திரு S.I.ஆனந்தராஜா - ஊறணி, மட்டக்களப்பு
- அருட்திரு. S.டானியல் மோகன் - கிரான், மொறக்கொட்டான்சேனை
- அருட்திரு. P.R.நவேந்திரனுகூலன் - கரைநகர், அராலி சேகரக்குரு.
- சகோ. P.சுதாகரன் - அக்கராயன்குளம்
- சகோ. M.லூக் ஜோன் - உடபுசல்லாவ, நுவரேலியா
- சகோ.டேவிட் நிருஷிகன் - குடத்தனை.

## விழிப்பிரவு வழிபாடு

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் சலோம் நகர் ஆலயத்தில் 26-04-2013 அன்று விழிப்பரவு வழிபாடு ஒன்று நடைபெற்றது. மாலை 07:00 மணிக்கு சகோ.ந.சிவகுமாரின் ஆரம்ப ஜெபத்துடன் ஆரம்பித்த வழிபாட்டில் திருமறைப் படிப்பொன்றை கோணாவில் திருச்சபை குருவானவர் அருட்திரு. ம.ஜெயானந்தராஜா அவர்கள் நடாத்தினார். தொடர்ந்து தூய நற்கருணை வழிபாடு நடைபெற்றது. இதனை பாரதிபுரம், சலோம்நகர் திருச்சபை குருவானவர் அருட்திரு.எஸ்.ஜோய் துரைரட்ணம் நடாத்தினார். ஐக்கிய இரவுணவின் பின்னர் கிறிஸ்தவ திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டது. இவ்வழிபாட்டில் 85க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# Youth Get Together in Trincomalee







The Church of the American Ceylon Mission Trincomalee, Grace Church organized a youth get together in the name of 'Getting United' on behalf of Grace Church youths in the church.

This was the first youth get together in the church.since faced lot of crisis even though they proudly say that their church youth fellowship is still alive and they have well talented and dedicated youths.They have got an intention to gather their youths from all the places who belong to the church membership.Their parish priest Rev.P.J.Suriakumar guided and supported. About 35 youths gathered and they invited Bro.J.Jeyakumar from Ralodai and he gave message on importance and inner meaning of unity following that Bro.Dhevananth youth co ordinator of CACM Jaffna Region made a work shop on 'change' as well as Bro.Roshan has made a seminar on leadreship among christian youths.Ultimately this event was marvelous and they reached their vision. Especially their youth president Mr.Rajeshkumar organized this event and others provided their maximum efforts and participation for the sucess of this event. Finally with the god's grace they terminated the event with full of blessings and grace of god.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்புகளும் படைப்புகளின் மறுபக்கமும்

வானத்தையும் பூமியையும் அதில் காணப்படுகிறதும் காணப்படாததுமான யாவற்றையும் படைத்தவர் கடவுள் ஒருவரே என்பது மக்களின் அசையாத நம்பிக்கை. படைப்புகளை இரு வகையாகப் பிரித்துக் காணலாம். அதில் கடவுளின் படைப்புக்கள் தனியானவை. கடவுளின் படைப்புக்கள் யாவும் வெறுமையிலிருந்து படைக்கப்பட்டது. இதனை எபிரேய பாஷையில் (Exnihilo) என்பர். கடவுளின் படைப்புக்கள் எதுவானாலும் சரி அவைகள் ஒழுங்கு, சமநிலை (Balance), பரிமாணம் ஆகிய கணிப்பீட்டு அளவைகளினால் கணிக்கக் கூடியதாக இருக்கிறது. இதனை அறிந்து கொள்வது ஞானம். இந்த ஞானம் கடவுளுக்கு கீழ்ப்படிவதினாலும், கனம்பண்ணுவதினாலும் கிடைக்கும் ஆசீர்வாதமாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாமல், கனம்பண்ணாமல் வாழ்வதால் ஞானத்தின் மறுபக்கமாகக் கிடைப்பது அஞ்ஞானமாகிய சாபம். ஞானமற்ற வாழ்வு சாபம். இதனால் திருமறை வரலாற்று ரீதியாக தரும் பாடம் கடவுளை சார்ந்து வாழ்ந்தால் ஞானமாகிய ஆசீர்வாதம் கிடைக்கும். கடவுளுக்கு மறைந்து வாழ்ந்தால் அஞ்ஞானமாகிய சாபம் கிடைக்கும். கடவுளின் படைப்புக்கள் யாவும் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு வடிவமைந்திருப்பதால் புவியியல், வானவியல், பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல், உயிரியல், உடலியல் என்று பகுத்துக் கற்றுக்கொள்ள முடிகிறது. இவற்றில் கற்றுத் தேறியவர்கள் என்று யாருமில்லை. இவைகள் தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டியவைகள்.

மனிதனின் படைப்பின் வினோதங்களைக் கற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள புதிய படைப்புகள் மனிதனால் உருவாக்கப்படுகின்றது. இப்படைப்புகளுக்கு மூலப்பொருட்கள் தேவை. மூலப்பொருட்கள் மூலம் உருவாக்கப்படும் படைப்புகளை எபிரேய பாஷையில் (Bara) என்பர். இப்படைப்புகளும் ஒழுங்கு, சமநிலை(Balance), பரிமாணம் ஆகிய கணிப்பீடுகள் உடையவைகளாக இருக்கவேண்டும். இவ் வகைக்கணிப்பீடுகளைக் கடந்து செயல்படும்போது கடவுளின் படைப்புகளின் மறுபக்க செயற்பாட்டினைக் காணமுடிகிறது. இயற்கை ஒழுங்கின் சமநிலை(Nature Balance) தாக்கப்படும்போது அதன் எதிர் தாக்கங்களை சந்திக்க நேரிடும். பூமியில் கால்பங்கு நிலப்பரப்பும், முக்கால்பங்கு நீர்ப்பரப்புமாயுள்ளது. பூமியை முழுவதுமாக மூடுவதற்கான நீர் பூமியின் வடதுருவத்திலும், தென்துருவத்திலும் உறைந்த பனிக்கட்டியாகி சமநிலையை பாதுகாக்கின்றது. அப்பனிப்படலம் உருகும் நிலை ஏற்பட்டால் பூமியின் நிலப்பரப்பு முற்றுமாக நீரில் மூழ்கும் அபாயம் உண்டு. ஓசோன் படலத்தில் ஏற்ப்பட்ட தாக்கம் மனித படைப்பின் செயற்பாடுகளில் சமநிலை பேணப்படவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

மனிதன் மண்ணினால் படைக்கப்பட்டவன் என்பது மண்ணுக்கும் மனித கூறுகளுக்கும் இடையில் உண்டான தொடர்பின் மூலம் புரிந்து கொள்ளலாம். மனிதன் பல்வேறுவகை உயிர்ச்சத்துக்களால் சக்தி பெறுகின்றான். இந்த உயிர்ச்சத்துக்களை அவன் சமநிலை உணவின் மூலம் (Balance Diet) பெறுகின்றான். இந்த சமநிலை உணவு மண்ணிலிருந்து தான் பெறப்படுகின்றது. மாச்சத்து, சக்கரைச்சத்து, இரும்புச்சத்து, கல்சியச்சத்து. கெந்தகச்சத்து. புரதச்சத்து இப்படியாக உயிர்ச்சத்துக்கள் இன்னும் பல உண்டு. இவை அனைத்தும் மண்ணில் விளைவித்துப் பெறுவனவாகும். இந்தச் சத்துக்கள் உணவின் அளவுக் ஏற்ப பயன்படுத்தப்பட வேண்டும். உணவில் உயிர்ச்சத்துக்கள் சமநிலையில் இல்லாமல் போகும்போது மனிதன் நோயாளி ஆகிறான். இழந்து போன உயிர்ச்சத்துக்களைப் பெற்று சமநிலைப்படுத்துவதால் அவன் நோயிலிருந்து குணமடைகிறான். கடவுள் மனிதனை மண்ணால் படைத்து தனது ஜீவ சுவாசத்தைக் கொடுத்து ஜீவாத்துமாவாக்கியதுடன் நின்றுவிடவில்லை. அவன் உடல் நலம் குன்றியபோதும் அதற்கான மருந்துகள் மண்ணில் உண்டு எனக் காணும் ஞானத்தை மனிதனுக்குக் கொடுத்தார்.

உடல் நலத்துக்கு சமநிலை உணவும், சத்தும் தேவைப்படுவது போல மனவளத்திற்கும் சமநிலை உணர்வு (Psycho Balance)தேவை. மனிதன் தனது உணர்வுகளை கண், மெய், செவி, மூக்கு, நாவு ஆகிய உறுப்புகள் மூலம் வெளிப்படுத்துகின்றான். இதனை ஐம்புலன் உணர்வுகள் என்பர். இந்த உணர்வுகள் சமநிலையாகப் பேணப்பட வேண்டும். அதே வேளை உணர்வுகள் அடக்கப்படுவதும் தீமையை விளைவிக்கும். உணர்வுகளின் வெளிப்பாட்டு எல்லை அதன் நன்மை பயக்கும் பயன்பாட்டில் தங்கியுள்ளது. எல்லை கடந்த உணர்வுகள் தீமை பயக்கும் செயல்களை வெளிப்படுத்தும். சுதந்திரம் என்பது நன்மை பயக்கும் பயன்பாட்டின் உணர்வாகும். இன்று சுதந்திர உணர்வுகள் மதிக்கப்படாமல் அடக்கப்படுவதால் போராட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றது. போராட்டங்களை இரண்டு வகையில் காணலாம். அவை ஆக்கம் தரும் போராட்டங்கள், அழிவு தரும் போராட்டங்கள். ஆக்கம் தரும் போராட்டங்கள் மறுமலர்ச்சிகளையும் புதிய புரட்சிச்சிந்தனைகளையும் உருவாக்கும். எனவே ஆக்கம் தரும் போராட்ட உணர்வுகள் தேவை. சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக இப்போராட்ட உணர்வுகள் தேவைப்படுகின்றது. பாலியல் வல்லுறவு, மதுவெறி, தீண்டாமை போன்ற தீய செயல்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை ஆக்கம் தரும் போராட்டங்களால் மாற்றிக் கொள்ளக் கூடியவை. உளவளம், மனவளம் சமநிலைப்படுத்தப்பட ஆக்கம் தரும் போராட்ட உணர்வுகள் தேவை. இவ்வகைப் போராட்டங்களினால் புதிய படைப்பாளர்களாகக் காணப்பட்டவர்களை வரலாற்றில் காணலாம். ஹென்றி டுனான்ற் என்பவர் செஞ்சிலுவை சங்கத்தை தோற்றுவித்தார். அருட்தந்தை டேமியன் குஷ்டரோகிகளுக்கு மறுவாழ்வு கொடுத்தார். புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியப் பணியின் சிறப்பை உலகுக்கு எடுத்துக் காட்டினார். மகாத்மா காந்தி அறப்போர், சத்தியாக்கிரகம் மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். அருள்தாய் திரேசா அம்மையார் அன்பினால் சாதிக்க பல தேவைகள் உண்டு என்பதை தனது பணி மூலம் எடுத்துக் காட்டினார்.

அன்பு, சந்தோஷம், கோபம், இரக்கம், துக்கம், வெறுப்பு, பயம், பெருமை, பொறாமை ஆகியவை பல உணர்வுகளின் வெளிப்பாடு இவைகளும் சமநிலை உணர்வுடன் பேணப்படவேண்டும். இவற்றில் மனவளத்தைப் பெலப்படுத்துபவைகளும் உண்டு. மனவளத்தைப் பெலவீனப்படுத்துபவைகளும் உண்டு. இவற்றைப் பகுத்துப் பார்த்து, நன்மை பயக்கும் செயல்களை வெளிப்படுத்த மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். இதனை ஆன்மீக ஆற்றலினால் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம். இதற்குத் துணையாக இருப்பது திருமறை அறிவு. படைப்புகள் யாவும் அழியக்கூடியவை. எனவே நாம் என்றுமே அழியாதவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். என்றுமே அழியாதது திருமறை வார்த்தை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார், "விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா"(மத்தேயு:-24:35). என்றுமே அழியாதது கடவுளின் அரசு. இதுபற்றி மலைப் பொழிவு மூலமாகவும், உவமைகள் மூலமாகவும் இயேசு கிறிஸ்து கற்றுத் தந்தார். இந்த அழியாத வார்த்தை இன்று நம்மிடம் இருக்கிறது. இந்த அழியாத வார்த்தையை வாழ்வாக்கிக் கொள்பவர்கள் பேறுபெற்றவர்கள். இந்த வார்த்தை நமது மனவள உணர்வுகளைப் பக்குவப்படுத்த வல்லது. நாமும் பேறுபெற்றவர்களாக நிலையான வாழ்வு வாழ இயேசு கிறிஸ்து மலைப் பொழிவினூடாகத் தந்த போதனையைக் காண்போம். (மத்தேயு:-5:3-10)

- ஏழையர் உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
- துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
- கனிவுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
- நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறை வாழ்வு பெறுவர்.
- இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
- தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
- அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.
- நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுடையது.

மேற்படி வார்த்தையினால் இறையரசின் பிள்ளைகளாவோம். நம்மைப்படைத்த தந்தையாகிய கடவுள், தான் படைத்தவற்றை அழிப்பவர் அல்ல. அவர் நம்மை அழிவுப்பாதையிலிருந்து மீட்பவர். நமக்காகப் படைக்கப்பட்ட படைப்புகளை நாம் சமநிலை மீறிப் பயன்படுத்துவதால் படைப்புக்கள் அதன் மறுபக்க விளைவாக எதிர்த் தாக்கத்தைத் தரும். அந்த அழிவுக்கு நாமே காரணமாவோம். எனவே அழியாத வார்த்தை தந்த இயேசு கிறிஸ்துவின் வழியில் இறையரசு காண்போம் வாரீர்.!!

-வண. V.N. தர்மகுலசிங்கம்-





அண்மையில் சாவகச்சேரி CACM ஆலயத்தில் நடைபெற்ற திடப்படுத்தில் வழிபாட்டில் பங்கேற்ற பேரவைத் தலைவர் அருட்திரு.ஈனோக் பு.புனிதராஜா அவர்களால் 4 பேருக்கு திடப்படுத்தல் வழங்கப்பட்டு திருச்சபையின் முழு அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். அதில் சில காட்சிகளையே மேலே காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர் D.J.அம்பலவாணர் ஞாபகார்த்த நூலகம்


மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் முன்னாள் பேராயர் கலாநிதி D.J.அம்பலவாணர் அடிகளாரின் நினைவாக ஓர் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு கல்லூரி முதல்வர் அருட்திரு.A.S. தேவகுணானந்தன் தலைமையில் அருட்திரு.M.ஜெயானந்தராஜாவின் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது. மாணவர் நலன்துறைக் காப்பாளர் அருட்திரு.J.அன்ரனி சுதாகரின் வரவேற்புரையைத் தொடர்ந்து பேராயரின் குடும்பத்தினராகிய வைத்தியக் கலாநிதி.சந்திரா அம்பலவாணர் (பிஷப் அம்மா), கலாநிதி.தர்ஷன் அம்பலவாணர், அருட்திரு.D.S.அம்பலவாணர் ஆகியோர் கல்லூரி சமூகத்தால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பேராயர் அம்பலவாணர் அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்து முறையே CACM பேரவைத் தலைவர் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா, அருட்திருவாளர்களான P.R.நவேந்திரனுகூலன், D.S.மதியாபரணம், திரு.G.இராஜநாயகம் (யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர்), திரு.றோய் விஜயரட்ணம், பங்களூர் விஸ்தார் நிறுவனத்தின் ஸ்தாபகர் அருட்கலாநிதி.டேவிட் செல்வராஜா ஆகியோர் உரைகளை வழங்கினர்.


இந் நூலகத்திற்கு ஆயிரக் கணக்கான நூல்களை பேராயரின் சகோதரன் அருட்திரு.D.S. அம்பலவாணர் கையளித்தார். அதனை பேராயர் அம்மா நூலகப் பொறுப்பாளர்களான அருட்திரு.J. தேவருட்செல்வம், திருமதி.ம.சுகந்தி ஆகியோருக்கு வழங்கிவைத்தார்.

பேராயரின் குடும்பத்தின் சார்பில் கலாநிதி.தர்ஷன் அம்பலவாணர் அவர்கள் பதிலுரை அளித்தும் நன்றி தெரிவித்தும் பேசினார். அதனைத் தொடர்ந்து இவ்விழாவினை சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து அருட்திரு.J.அன்ரனி சுதாகர் பேசினார். இறுதியில் பேரவைத் தலைவரின் ஜெபத்தோடும் ஆசீர்வாதத்துடனும் இந்நிகழ்வு நிறைவெய்தியது. யாழ்., வன்னி, மட்டக்களப்பு, கொழும்பு பிராந்தியங்களின் குருமாரும் விசுவாசிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


(D.S.M)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Historical Event

## Service of Installation of the 4th Principal of Christian Theological Seminary of Sri Lanka.



The day which fell on Tuesday, May 14th 2013, a historical day in the annals of the American Ceylon Mission. On this particular day Rev.Arulanantham Samuel Thevagunananthan was installed as the 4th principal of the Christian Theological Seminary, Chunnakam at the vibrant service held at Good Shepherd Church(CACM), Uduvil .

At 4:30 pm the members of the Seminary Council who were clad in Black cloak along with some presbyters who were in charge of the service proceeded towards the alter in procession. The whole service was conducted in mother tongue with the invocation which was made by Rev.I.Rajkumar, Minister-in-Charge of Uduvil parish. It was based on the great commandment, St.Matthew:- 28:19, 20. Invocation was followed by lightning traditionally of oil lamp. The following guests were called on to participate in lightning.

1. Rev.Enoch P.Punitharajah, the Chairperson, CACM.
2. Rev.Fr.Michael Sountharanayagam, Rector, St.Xavior Seminary, Columbuthurai, Jaffna.
3. Rt.Rev.Dr.S.Jebanesan, Bishop Emeritus, JDCSI.
4. Rev.A.Jeyakumaran, Former Chairperson, CACM.
5. Dr.Darshan Ambalavanar, Director for Theology, CACM.
6. Rev.J.Thevaarudselvam, Lecturer, Christian Theological Seminary of Sri Lanka.
7. Rev.B.Thevathas, The Secretary, CACM.
8. Rev.P.R.Navendranugoolan, Seminary Council.
9. Mr.K.Prathaban, EX.CO Member, CACM Vanni Region.
10. Mr.Mahendrakumar, EX.CO Member, CACM Jaffna Region.
11. Rev.T.Daniel Ranjith, Pastors' Union, CACM Jaffna Region.
12. Rev.S.John Lingeswaran, Pastors' Union, CACM Vanni Region.
13. Mrs.S.S.Thevagunananthan, Principal's Family.
14. Mr.S.Selvanayagam, Treasurer, The Uduvill Church
15. Bro.P.Sandrasegar, C.T.S Student.

Opening prayer was made by Rev.J.Antony Suthagar, Dean of Students. Intercession was led by Rev.V.Rajkumar, Chairperson of the CACM Jaffna Region.

The responses which were composed in the basis of Christology were responded by the congregation as responses to intercession.

The Biblical portions which were selected by the preacher, Rev.Fr.Dr.Michael Soundaranayagam, Rector, were read by the following. Bro.John Vijayathasan, President, Student Union, CTS, read the Old Testament portion. The Epistle and the Gospel were read by Bro.David Nirukshan, Assistant Pastor, Colombo Church and Rev.D.S.Mathiyaparanam, one of the members of Governing Council, C.T.S, respectively.

In the course of Biblical Reading, Praise and Thanksgiving were made by both Regional Heads Rev.S.I.Anantharajah of the East and Rev.D.S.Kuganeswaran of the Wanni Region.

The Nucleus of the service was the installation, which was performed by Rev.Enoch P.Punitharajah, the Chairperson of the CACM. The time "Kairos" arrived, Rev.Arulanantham Samuel Thevagunananthan was installed and announced officially as the 4th principal of the Christian Theological Seminary, Chunnakam.

Afterward the Chairperson handed over the scripture to witness the word of God to the servants in His vineyard. Following installation, the Chairperson gave a brief introduction about the Principal. Having installation was performed; a special song was rendered the seminarians.

(Continue in Page 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்



(படித்துச் சுவைத்தவை)

1. கோபம் அரக்க மனதின் ஆயுதம்
அதற்கு அழிக்கத்தான் தெரியும்
கோபம் வாழ்க்கையைச் சிக்க வைக்கும்
உறவுகளை சிதைக்கும்
அமைதியைக் குலைக்கும்
ஆயுளைக் குறைக்கும் - புத்தர்

2. நான் என்ற அகந்தை உணர்வு
எங்கே வேர் பிடித்து விருட்சமாக வளர்ந்து வருகின்றதோ
அங்கே தான் கோபம் என்னும் விஷக்கனி
காய்த்துக் குலுங்கும் - சாக்ரடிஸ்

3. கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்
கொடும் கோபம், பேரதிர்ச்சி - பாரதியார்

4. இயலாமையின் வெளிப்பாடு தான் கோபம்
எந்தக் கோபமும் நம் முட்டாள் தனத்தில் பிறந்தது
கழிவிரக்கத்தில் முடிகிறது.-வள்ளலார்

5. ஒரு சின்னக் கோபம் அடிப்படை உறவுகளையே
ஆட்டிப்படைக்கும். - புத்தர்

6. உங்கள் கோபத்துக்கு அடிப்படைக் காரணம்
மற்றவர் அல்ல
நீங்கள் தான் என்பதை
உணர்ந்துவிட்டீர்களானால்
இந்தக் கோபம் எப்பேர்பட்ட
முட்டாள் தனம் என்று புரிந்து விடும் - ஜக்கி வாசுதேவ்

7. உங்களை மற்றவர்களின் நிலைக்குக் கொண்டுவாருங்கள்
எப்போதும் எதிரில் இருப்பவர்களின் மனநிலையையும்
கவனத்தில் கொள்ளுங்கள், கோபம் வராது - எடிசன்

D.S.M

# யோவான் நற்செய்தி நூலின் 7 என்ற சிறப்புக்கள்

யோவான் நற்செய்தி நூலில் இயேசுவின் சிறப்புப் பெயர்கள் (1ம் அதிகாரத்தில் உண்டு), இயேசுவின் 7 அரும் அடையாளங்கள், இயேசுவைக் குறித்த 7 சாட்சிகள், 7 வெளிப்பாடுகள் (இயேசுவின் 7 அறிக்கைகள்) என்பன சிறப்பான இலக்கியப் பண்போடு எழுதப்பட்டுள்ளது.



1. ஏழு சிறப்புப் பெயர்கள்
   a. 1:29 - இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி
   b. 1:34 - இவரே கடவுளின் மகன்
   c. 1:38 - ரபி (போதகர்)
   d. 1:41 - மெசியாவைக் கண்டோம்.
   e. 1:45 - அவர் நாசரேத்தூர் யோசேப்பின் மகன் இயேசு
   f. 1:49 - நீர் கடவுளின் மகன், நீரே இஸ்ராயேலின் அரசர்.
   g. 1:51 - தூதர் மானிடமகன் மீது ஏறுவதையும்.....

2. ஏழு அரும் அடையாளங்கள்
   a. கானாவூர் திருமணம் 2:1-12
   b. அரச அலுவலர் மகன் குணம் பெறுதல் 4:43-54
   c. 38 வருடமாய் உடல் நலமற்றவர் குணம் பெறல் 5:1-9
   d. அப்பம் பலுகுதல் 6:1-13
   e. கடலின் மீது நடத்தல் 6:16-21
   f. பார்வையற்றவர் பார்வை பெறுதல் 9:1-17
   g. இலாசர் உயிர் பெறுதல் 11:1-44

3. ஏழு சாட்சிகள்
   a. திருமுழுக்கு யோவான் அளிக்கும் சாட்சி 1:15,1:34,5:36
   b. தந்தை சாட்சியம் கூறுகின்றார்.5:37
   c. இயேசுவுக்கு இயேசுவே சாட்சி 8:16, 8:18
   d. இயேசுவின் செயல்களே இயேசுவுக்குச் சாட்சியம் 5:36
   e. மறைநூல் சாட்சியம் 5:39
   f. ஆவியானவரின் சாட்சியம் 15:26
   g. சீடர்களின் சாட்சியம் 15:27

4. ஏழு வெளிப்பாடுகள்
   a. நானே வாழ்வு தரும் உணவு 6:31-35
   b. நானே உலகின் ஒளி 8:12
   c. நானே மெய்யான வாயில் 10:7
   d. நானே நல்ல ஆயன் 10:14-15
   e. நானே உயிர்த்தெழுதலும் வாழ்வும் 11:25
   f. நானே வழியும் உண்மையும் வாழ்வும் 14:6
   g. நானே உண்மையான திராட்சைச் செடி 15:1


(யோவான் காட்டும் பாதையில் என்னும் நூலிலிருந்து)

D.S.M

# பெந்தெகொஸ்தே விழா

இவ் வருடம் மூன்றாவது தடவையாக ஏழாலை தெற்குத் திருச்சபையில் அருட்திரு. G.D. மைனசீலன் தலைமையில் பெந்தேகொஸ்தே விழா 19.05.2013 ஞாயிறு அன்று மலை 03:45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. முதல் நிகழ்வாக தூயாவியர் வருகை இன்னிசை வழிபாடு நடைபெற்றது. ஏழாலை தெற்கு, சத்தியபுரம், அளவெட்டி ஆகிய திருச்சபைகளின் பாடகர் குழுவினர் தூயாவியர் வருகை இன்னிசைப் பாடல்களைப் பாடினர். அருட்திரு.வ.இராஜ்குமார் தூயாவியர் பற்றி வேதப்படிப்பு சார்ந்த செய்தி வழங்கினார். இரண்டாவது நிகழ்வாக மூன்று நடனங்கள் அரங்கேற்றப்பட்டன. ஏழாலை சிறிமுருகன் பாடசாலை மாணவிகள் நடன ஆசிரியை மூலம் பழக்கப்பட்டு தூயாவியர் பாடல்களுக்கு சிறந்த நடனங்களை வழங்கினார்கள். ஏழாலை தெற்கு சபைப் போதகரும் வாலிபர்களும் இணைந்து சிறு அசைவுகளுடன் கூடிய நடனம் ஒன்றை வழங்கினர். ஏழாலை வடக்கு, அளவெட்டி, சத்தியபுரம் சபைகளின் மக்களும் குருமாரும் வருகை தந்து விழாவினை சிறப்பித்தனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்தின் குரல்

## மலையகத்திலிருந்து லூக்கா போதகர்

அப்போது காலை 10 மணி இருக்கும். எனது குருமனைக்கு வெளியே அமர்ந்திருந்த போது என் கண்களில் பட்ட ஒரு காட்சி. கொழுந்து பறித்துக் கொண்டிருந்த ஒரு தாயானவள் மிகவும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்டார். அவரிடம் வினவிய போது வேலைக்கு வந்தது முதல் பல முறை அட்டை கடித்ததால் பெருமளவு இரத்தம் வெளியேறியதால தனக்கு சோர்வாக இருப்பதாக கூறினார். அவர் மிகவும் களைப்படைந்து இருந்த போதும் தனது வேலையை நிறுத்தவில்லை. நிறுத்தவும் முடியாது. ஆம் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக ஒரு சமூகம் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென்னிந்தியாவிலிருந்து மலையகத்தில் தோட்ட வேலைக்கென பிரித்தானிய அரசால் கொண்டுவரப்பட்டவர்களே இந்த தோட்டத்தொழிலாளிகள். 1823ம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து முதலாவது குழு வேலைக்கென கொண்டுவரப்பட்டது. இவர்கள் கட்டாய கூலித்தொழிலாளிகளாக கொண்டுவரப்பட்டனர் (indentured laborers). கம்பனிகளினால் கட்டப்பட்ட லயங்களிலே ஆரம்பமான வாழ்க்கை பயணம் இன்றும் தொடர்கின்றது. ஆரம்ப காலங்களில் காணப்பட்ட வசதியின்மைகள் இன்று இல்லாவிட்டாலும் தேயிலைச் செடிகளின் நடுவே சிந்தப்படும் இரத்தத்தின் சரித்திரம் இன்னும் மாறவில்லை.

தேயிலைச் செடிகளின் நடுவே ஆயிரமாயிரம் தோட்டத்தொழிலாளிகளின் இரத்தம் நாள் தோறும் சிந்தப்படுகின்றது. சிறப்பாக பெண்கள் நினைக்கப்பட வேண்டியவர்கள். இரண்டு நூற்றாண்டுகளாக இது ஒரு தொடர் நிகழ்வு. நாம் அருந்தும் தேநீரில் வெறும் தேயிலையின் சாயம் மட்டுமல்ல ஒவ்வொரு தோட்டத்தொழிலாளியும் சிந்தும் இரத்தம் கலந்துள்ளது. நாம் தேநீரை சுவைக்கும் ஒவ்வொரு நேரமும் அது எமக்கு திருவிருந்து என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பின்னணியுடன் ஆதியாகமம் 4:1-10 வரையான திருமறைப் பகுதியை ஒருமுறை தியானிப்போம். இங்கு கூறப்படும் சம்பவத்தின் காட்சியாளர்களாக காண்பிக்கப்படும் காயீன் ஆபேல் என்பவர்களை இரண்டு வேறுப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகளாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். நிலத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாயம் செய்து வாழுகின்ற சமூகத்தின் பிரதிநிதியாக காயீனும் நிலம் மற்றும் நிலவுரிமை இல்லாமல் நாடோடிகளாக வாழுகின்ற இடையர் சமூகத்தின் பிரதிநிதியாக ஆபேலும் இங்கு காட்சிப்படுத்தப்படுகின்றனர். பணம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு நிறைந்த ஒரு சமூகமாக காயீனையும் பலமற்ற ஒடுக்குதலிலும் சுரண்டலிலும் ஒடுங்கிப்போன ஒரு சமூகமாக ஆபேலையும் நாம் புரிந்து கொள்ளும் படியாக அழைக்கப்படுகின்றோம்.

ஒருமுறை இவர்கள் இருவரும் கடவுளுக்கென்று காணிக்கை ஒப்படைக்கின்றனர். இருவரும் தரம் மற்றும் சிறப்பானவைகளையே ஆண்டவருக்கென்று காணிக்கையாக படைத்தனர். ஆனால் கடவுள் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் காயீனின் காணிக்கையை கடவுள் ஏற்றுக்கொள்ளவில்லை? ஓய்வுநாட்பாடசாலைகளிலே கூறப்படும் ஒரு விடயம்: அவன் தரமானவற்றை கொடுக்கவில்லை என்பதாகும். அப்படியல்ல. ஒரு சமூகம் நிலம், மற்றும் நிலவுரிமை இழந்த நிலையில் காணப்படும் அதேவேளை எல்லாவற்றையும் தனக்கென்று வளைத்துப் போட்டுக்கொண்டு அதில் வரும் வருமானத்தினால் கடவுளை மகிழ்ச்சிப்படுத்த முடியாது. அத்தகைய காணிக்கைகளை கடவுள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார் என்பதும் இங்கு எமக்கு புலனாக வேண்டும். சுரண்டலினால் வரும் இலாபங்களை கடவுள் எதிர்க்கின்றார் என்பது இங்குத் தெளிவாகின்றது. ஆனால் ஆபேல் நாடோடி வாழ்க்கையிலிருந்து ஒடுக்குதலிலிருந்து கடவுளுக்கென்று கொடுக்கின்றார். இங்கு கொடுப்பதின் அளவு மற்றும் தரம் குறித்து பார்க்கப்படாமல் அவர் எத்தகைய பின்னணியில் இருந்து கொடுக்கின்றார் என்பது பார்க்கப்படுகின்றது. இந்த சிந்தனையின் அடிப்படையிலே தான் ஆண்டவர் இயேசுவும் விதவைப் பெண்ணின் காணிக்கை குறித்து பெருமையாக பேசினார் (லூக்21:4).

இதன் விளைவு என்னவென்றால் காயீன் ஆபேலை கொலை செய்கின்றார். பலம் மற்றும் அதிகாரம் கொண்ட பெரும்பான்மையினம் பலமற்ற செல்வாக்குகள் அற்ற சிறுபான்மையினத்தை படுகொலை செய்கின்றது. உரிமையின் குரல்வளை நசுக்கப்படுகின்றது. ஆனால் இங்கு சிந்தப்பட்ட ஆபேலின் இரத்தம் கடவுளை நோக்கி கதறுகின்றது (ஆதி4:10). இந்தக் கதறல் என்பது வெறும் சத்தம் அல்ல. தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்கும் கதறல். அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட ஆபேல் சமூகத்தின் மனித உரிமையை கேட்டு நிற்கும் கதறல்.

இன்று இரண்டு நூற்றாண்டுகளாக தேயிலைச் செடியின் நடுவே சிந்தப்பட்டுக் கொண்டிருக்கும் தோட்டத்தொழிலாளிகளின் இரத்தமும் கடவுளை நோக்கி நீதியின் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறது. ஆபேலைப் போல சொந்தமாக நிலம் இல்லாமல் தோட்டத்திலுள்ள கம்பனி லயங்களில் முடங்கி போயிருக்கும் இந்த மலையக மக்களின் கதறலும் ஆண்டவரிடம் சென்று கொண்டிருக்கிறது. இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னிலைக்கு கொண்டு வர ஒரு சமூகம் நாள்தோறும் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறது. இந்த சிந்தப்படும் இரத்தம் தமக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகள், அநீதிகள், ஒடுக்குதல்கள் போன்றவற்றிக்கு எதிராக நீதியின் குரல் எழுப்புகின்றது. ஏனெனில் இது அநேகருக்காக சிந்தப்படும் திரு இரத்தம் (மாற்14:24).

இவ்வேளையில் கடவுள் “உன் சகோதரன் எங்கே?” என்ற கேள்வியோடு தோட்டத்தொழிலாளர்கள் மீது திருச்சபைக்கு இருக்க வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகின்றார். இம்மக்களுக்கு நாம் என்ன காவலாளியோ என கேட்பதை விடுத்து, மலையக தோட்டத்தொழிலாளிகளின் உரிமைக்குரலாக, காவலனாக திருச்சபையை கடவுள் அழைக்கின்றார். தேநீரைச் சுவைக்கின்ற ஒவ்வொரு திருச்சபையின் அங்கத்தவரும் இம்மக்களின் சகோதர சகோதரிகளாக காவலராக மாற வேண்டும். இங்குள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு திருச்சபை சமூகம் கைக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தோட்டத்தொழிலாளிகளின் குடும்பங்களையும் திருச்சபை சமூகம் தத்தெடுக்க வேண்டும். அப்பொழுது தான் தேயிலைச் செடிகளின் வேர்களில் பலருக்காக சிந்தப்பட்டுக்கொண்டிருக்கும் இரத்தத்திற்கு ஓர் அர்த்தம் கிடைக்கும்.

# திருப்பிப் போடப்படாத அப்பங்கள்

ஓசியா என்னும் இறையுரையாளர் இஸ்ரவேல் மக்களின் குறைபாடுகளைத் தொகுத்துக் கூறும்போது 'எப்பிராயீம் திருப்பிப் போடப்படாத அப்பம்'(ஓசியா:-7:8) என்கிறார்.

அவர்கள் இறைவனுக்குத் தங்களை
ஓரளவுக்கு மட்டுமே ஒப்படைத்தவர்கள்
அரைகுறைவான பற்றுடையவர்கள்
ஒரு புறம் மட்டுமே ஆவியின் அனலைப் பெற்றோர்
நிறைவைக் காணாதோர்
உறுதியற்ற உள்ளத்தவர்

என்பதால்

அங்ஙனம் கூறுகின்றார்!
ஏசாயாவின் மொழியில் அத்தகையோர்
உதடுகளில் அனலைப் பெற்றவர்கள்
உள்ளத்தில் அதனைப் பெறாதவர்கள் (ஏசாயா:-29:23)
வாயார இறைவனைப் புகழுகின்றோர்
இதயத்தையோ அவருக்கு தூரமாக்குவோர்!

அவ்வாறே
அன்பின் இரு பக்கங்களைக் காட்டும் வகையில் ஆண்டவர் ஈந்துள்ள இரு மடிப்புக் கட்டளைகளுள் ஒன்றை மட்டுமே உறுதியாக பற்றிக் கொள்வோம்!
அவர்களும்

திருப்பிப் போடப்படாத அப்பங்கள்! ஒரு பக்கம்
தீய்ந்து கெடுகிற அப்பங்கள்!

அங்ஙனமே

செயலில் வெளிப்படுத்தாமல்
தங்கள் விசுவாசத்தைச்
செத்த விசுவாசமாக்குவோரும் (யாக்கோபு:-2:26)
திருப்பிப் போடப்படாத அப்பங்கள்! ஒரு பக்கம்
தீய்ந்து கெடுகிற அப்பங்கள்!....

அரை வேக்காட்டு அப்பமாகி விட்ட எப்பிராயீம் பாகாலை நாடிச் சென்றான்!
அசீரியரிடம் உதவி தேடினான்! (ஓசியா:-13:1)
ஆனால்

பாகாலும் அசீரியாவும் அவனைத்
திருப்பிப் போட திருத்தி நிறுத்த முடியவில்லை!

இறுதியில்

வெறுமைகளை வெற்றுப் பாகால்களை
வீணான இடங்களை வெடிப்புத் தொட்டிகளை
வெறுப்புக்குரிய அசீரியரை
நாடி ஓடிடாமல்,

மெய் வாழ்வை நிறைவாய்த் தருபவராம்
ஆண்டவரிடம் நம்மை முழுமையாய்
ஒப்படைக்கும் போது அகமும், புறமும் ஆவியின் அனலைப் பெறலம்.

இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த போது ஜெர்மனி நாட்டில் குண்டுகளால் தரைமட்டமாக்கப்பட்டிருந்த ஒரு கிராமத்தின் வழியே அமெரிக்க இராணுவப் படையினர் முன்னேறிக் கொண்டிருந்தனர். அங்கு பத்து வயது சிறுமி ஒருத்தி பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் இழந்தவளாய் பசிக்கொடுமையைத் தாங்கமுடியாமல் மயங்கி விழுந்து கிடந்தாள். ஓர் இராணுவ வீரன் அவளிடம் ஓடிச் சென்று தன்னிடம் இருந்த ரொட்டியை அவளுக்குக் கொடுத்தான். ஆனால் அவள் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தாள். 'உங்களை என்னால் நம்பமுடியாது, உங்களை நம்பக்கூடாது என்று என் தாய் சொல்லியிருக்கிறார். இந்த ரொட்டியில் விஷம் வைக்கப்பட்டிருக்கலாம்' என்று கூறினாள். உடனே அந்த இராணுவ வீரன் 'அப்படியென்றால் நான் முதலில் ரொட்டியைக் கடித்துச் சாப்பிடுகிறேன், அப்புறம் நீ கடித்துச் சாப்பிடு' என்று கூறியதும், அச் சிறுமி அதற்கு ஒப்புக் கொண்டாள். இவ்வாறு நமது ஆண்டவர் இயேசு எம் மீது விழவேண்டிய சுமைகளை, பாடுகளை தான் ஏற்றுக்கொண்டு எங்களுடைய பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டுமென்று அழைப்பு விடுவதோடு பேதுரு சொல்வதைப் போல் நாம் ஆண்டவருடைய பாடுகளுக்கு பங்காளிகளாக இருப்பதைப் போல் எண்ணி மகிழ வேண்டும்.

அரைவேக்காட்டு அப்பங்களாய் நம்மைத் தம்
காயத் தழும்புகளேற்ற திருக்கரத்தால் திருப்பிப் போட்டுத்
தூய ஆவியின் அனலினால் இரு புறமும் வெந்த
அப்பங்களாய் இருந்திடச் செய்வார்.

சகோ. N.T. சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் திருச்சபையில் நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாடு

கடந்த 31-03-2013 ஈஸ்டர் வழிபாடு மானிப்பாய் திருச்சபையில் நடைபெற்றது. அவ்வழிபாட்டில் கலந்து கொண்ட பேரவைத்தலைவர் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா அவர்களால் ஏழு பேருக்கு திடப்படுத்தல் வழங்கப்பட்டதோடு இறைசெய்தியும் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

திடப்படுத்தல் பெற்றோரை சபைக் குருவானவர் அருட்திரு. E.K.சுரேந்திரன் அவர்கள் தகுந்த முறையில் ஆயத்தம் செய்து அவர்களை திடப்படுத்தலுக்கு முன் நிறுத்தினார். திடப்படுத்தல் பெற்றுக்கொண்டவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

1. செல்வன். அலன் அபிஷேக் சுரேந்திரன்
2. திருமதி. தனுஷியா ஆனந்தராஜா
3. செல்வி. றொகானா தர்மினி பரமரட்ணம்
4. திரு. அன்ரனி மகாலிங்கம்
5. செல்வி. றெமின்சியா லோறன்ஸ் றெமின்சியஸ்
6. செல்வி. றெமின்சனா லோறன்ஸ் றெமின்சியஸ்
7. செல்வி. தர்மினி நிருஷா செல்வநாயகம்

# ஆன்மீக எழுச்சிக் கூட்டம்

யாழ்.பிராந்திய நற்செய்திப் பணிக் குழுவினால் அதன் இயக்குனர் அருட்திரு. G.D.மைனசீலன் தலைமையில் இவ் வருடத்தின் முதல் ஆன்மீக எழுச்சிக் கூட்டம் உடுவில் திருச்சபையில் 26.05.2013 ஞாயிறு மாலை 04:30 - 08:00 மணி வரை நடைபெற்றது. ஆன்மீக எழுச்சிப் பாடல்கள், பட்டி மன்றம், வேதப் படிப்பு, சாட்சி கூறுதல் என்பன நடைபெற்றன. திரு. N.தம்பிமுத்து அவர்கள் "பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் இன்று நாம் கைக்கொள்ள வேண்டியவைகளா?" என்னும் பொருளில் வேதப் படிப்பு நடாத்தினார். உடுவில் சபைமக்கள், இறையியல் கல்லூரி மாணவர்கள், சத்தியபுரம் சபைமக்கள் மற்றும் குருமார் கலந்து ஆன்மீக எழுச்சி பெற்றனர். திருமதி.ஜெபஜோதி சுதர்சன் பியர்னோ இசையினால் மெருகூட்டியிருந்தர்.

# சர்வதேச ஜெபதின ஐக்கியத்தினரின் ஜெபதினம் அனுஷ்டிப்பு வழிபாடு





சர்வதேச ஜெபதின ஐக்கியத்தினரின் ஜெபதின அனுஷ்டிப்பு வழிபாடுகளை நடாத்தும் பொறுப்பை கடந்த ஆண்டும் இவ்வாண்டும் *CACM* திருச்சபையினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வழிபாடுகள் நடைபெற்றன. யாழ்.மாவட்ட வழிபாட்டை *CACM* யாழ்.பிராந்திய பெண்கள் ஐக்கியத்தினர் பொறுப்பெடுத்து மானிப்பாய் திருச்சபையில் நடாத்தினர். கொழும்பிலிருந்தும், பிற தேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொணடு சிறப்பித்ததோடு யாழ்.பிராந்திய *CACM* பெண்களையும் அவர்களின் செயற்பாட்டையும் பாராட்டிச் சென்றனர். அனைத்து ஒழுங்குகளும் யாழ்.பிராந்திய பெண்கள் ஐக்கியத் தலைவி திருமதி.தே.இராஜ்குமார் அவர்களால் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஞான ஒடுக்கமும்.......

(1ம் பக்க தொடர்ச்சி)

கொண்டார்கள். இதற்கு மெதடிஸ்த திருச்சபையால் கிழக்கிலும் தெற்கிலும் அமைக்கப்பட்டுள்ள நற்செய்திப் பணி மையங்களும் நற்செய்திப் பணியாளர்களுமே காரணம் என தங்கள் திருச்சபையின் அனுபவம் மூலம் கூறி நற்செய்திப்பணி செய்யாமல் திருப்பணி வளராது என்றார்.

அத்துடன் சபை ஆளகை முறை என்றால் என்ன? CACM திருச்சபையும் முன்னர் சபையாளுகை முறையிலிருந்து பின்னர் பேராயர் ஆளகை முறைமைக்குள் சென்றதால் ஏற்பட்ட பல சவால்களையும் சுட்டிக்காட்டி மீண்டும் சபையாளுகை முறைமைக்குள் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்றும், சபையாளுகை முறைமையை புரிந்து கொண்டு பணியாற்றும்படியும் அறைகூவல் விடுத்தார்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து குருமாருக்கான கூட்டத் தொடர் நடைபெற்றது. இதில் பல குருமார் தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் பணிக்களங்களில் இருக்கின்ற தேவைகளையும் பகிர்ந்து கொண்டனர்.

நீண்ட காலங்களுக்குப் பின்னர் நடைபெற்ற இவ் ஒன்றுகூடல் புதிய சூழலில் நடைபெற்றது. இவ் ஓழுங்குகளை செய்து தந்த கொழும்பு பிராந்தியத்துக்கும் குறிப்பாக பிராந்திய செயலாளர் திரு.றோய் விஜயரட்ணம் அவர்களுக்கும் குருமார் ஒன்றியம் சார்பாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. இவர்களைப் போல் பொதுநிலையினர் பொறுப்புக்களை ஏற்று குருமாருடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற கருத்தும் அங்கு கூடியவர்கள் மூலம் அறிய முடிந்தது.

(D.S.M)

## A Historical Event.........................

(4th page Continues)

Not the last, but the least item of the service was an important item ; i,e word of God which was delivered by Rev.Fr.Dr.Michael Soundaranayagam. He related his sermon on the basis of the Biblical lessons that were already read. The preacher quoted the crucial verses out of the three lessons that were read on "Calling to Ministry". The glimpses of the sermon are as follows;

A) In the perspective of the Old Testament, he highlighted the calling of Prophet Jeremiah. In the Book of Jeremiah, calling of Jeremiah has been recorded thus "Before I formed you in the womb I knew you, before you were born I set you apart; I appointed you as a prophet to the nations." Dignity of calling can be compared to such deepest extent.

B) In the perspective of the Epistle, as St.Paul mentioned in IICorinthians:-4:1-12 the preacher highlighted the key verse 8. The particular verse says thus "we pressed on every side by troubles, but not crushed and broken". He further mentioned, that, God has kept this precious treasure in a perishable container, that is in our weak bodies (Verses 7). So everyone can see that the glorious power within must be from God and not from us. Relating this glory he mentioned about St.Francis Asisi.

C) In the perspective of the Gospel the preacher quoted John:-8:28, which says thus. "He who sent me is with me he has not deserted for. I always do these things that are pleasing to him. This sermon was highly appreciated by many of the participants.

The service came to end with the benediction of the Chairperson, CACM, was followed up by a fellowship of tea of 500 participants.

The Seminary wished him to carry on a fruitful ministry.

As the vibrant & versatile itinerant preacher, St.Sadu Sundar Singh mentioned that the theological seminary is his mother's bossom. God has handed over the CTS at the new Principal's hand. May God help him to render a great service to his mother's bossom.

**Rev.J.Thevaarudselvam**

# மரண அறிவித்தல்



இனுவில் கிழக்கு தியேட்டர் லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் இனுவில் CACM திருச்சபையின் உறுப்பினருமான சின்னத்தம்பி கந்தையா தேவதாசன் அவர்கள் 30-05-2013 வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார். அன்னார் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பேரவை மற்றும் யாழ் பிராந்திய பேரவை ஆகியவற்றின் உறுப்பினருமாவார். அன்னாரின் நல்லடக்க வழிபாடு புதன்கிழமை 5-6-2013 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, உடுவில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை யின் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப் படும்.

அன்னாரது இழப்பு குடும்பத்தினருக்கு மட்டு மல்ல, திருச்சபை சமூகத்திற்கும் பேரிழப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவையொட்டி திருச்சபை சமூகத்துடன் இணைந்து உதயதாரகையும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

## பதவியமர்த்தும் வழிபாடும்.................

(1ம் பக்க தொடர்ச்சி)

உறுப்பினர்) ஆகியோர் வாசித்தனர்.

இறையியல் கல்லூரியின் புதிய முதல்வரை பேரவைத் தலைவர் அருட்திரு.ஈனோக் பூ.புனிதராஜா பதவியில் அமர்த்த இறைசெய்தியினை அருட்தந்தை.கலாநிதி.மைக்கல் சவுந்தரநாயகம் (புனித சவேரியார் குருத்துவ மடம், கொழும்புத்துறை) பகிர்ந்துகொண்டார். கலாநிதி.பிரின்ஸ் ஜெயதேவன் ஜெயரட்ணம் (C.T.S ஆளுநர்சபை செயலாளர்) நன்றியுரையை நிகழ்த்தினார். இறுதி ஆசீர்வாதத்தை பேரவைத் தலைவர் அவர்கள் வழங்கினார்.

(D.S.M)

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் யாழ்.வீதி ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்துள்ள ரூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 31-05-2013 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org